**Minutes of the Public Hearing conducted for the project of common biomedical waste treatment facility at survey No. 249/3, Keelakottai group, Muthuvayal village, Paramakudi Taluk, Ramnathapuram District on 19.09.2023 at 10.30 AM in Sri Jeyamani Saraswathi Thirumana Mahal, Pogaloor village, Paramakudi Taluk, Ramnathapuram District**

**Present**

**Thiruvalargal :**

| | |
|---|---|
| 1. R. Govindarajalu | District Revenue Officer, Ramnathapuram District. |
| 2. S. Pandiarajan | District Environmental Engineer (a/c), Tamil Nadu Pollution Control Board, Ramnathapuram District. |
| 3. G. RajaRajeshwari | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ramnathapuram District. |
| 4. Project proponent Attendance and public | As per attendance register (copy of Register is enclosed). |

**Project Representative**

| | |
|---|---|
| 5. Dr. Anand Sokalingam | Ramnad Doctor's Association, Ramanathapuram. |

**Environmental Consultant**

| | |
|---|---|
| 6. Hanumanthraj | M/s. Samrakshan, F-4, first floor, Swastik Manandi Arcade, Sheshathripuram, Bangalore. |

Before the commencement of the public hearing meeting, few persons inside were shouting that the time was 11'O clock and No public turned up but you are conducting the meeting, so they might not be silent and condemn the department of Environment. Further asked to cancel the public hearing meeting. They said that the unit comes in their Panchayat and added that since it is located in the water drain area, fishes were dead. Further mentioned that previously they gave approval for the unit and the Tamil Nadu Pollution Control Board was cheating.

A person in the gathering said that not to install the unit at that site. Another person said that if the company comes, it will affect 4 numbers of (kanmoi) Tanks. In the meeting, they said that no prior information gave to their Panchayat and Panchayat President. Since, there was no public they asked to cancel the meeting.

District Environmental Engineer informed that the Bio medical waste treatment installation related public hearing meeting details were published on17.08.23 in "Thina Thanthi" & "Indian Express" and all the details of the proposals were informed through Tamil Nadu Pollution Control Board website and the draft Environmental Impact Assessment and Management were briefed both in English & Tamil, at the following places:

1. District Collector Office.
2. District Industrial Office.
3. Block Development Office, Pogaloor Union Office.
4. Panchayat Office, Keelampal Panchayath.
5. Panchayat Office, Muthuvayal village.
6. Office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board.
7. Office of the Tamil Nadu Pollution Control Board, Guindy, Chennai.
8. Zonal Office Forest and Environment Climate Change, Nungampakkam, Chennai.

One person in the meeting asked to whom details were given in KeelamPal Panchayat union? and how many public attended. Further mentioned that the meeting was conducted confidentially and to cancel the meeting. For which District Environmental Engineer said that it has been advertised in Auto and through notices. One person in the meeting asked how the public will access the website. People in the gathering continuously shouted to cancel the meeting and also shouted "where is the public?" "Where is the public".

One person on behalf of Muthuvayal village and Panchayat Union President asked to cancel the secret meeting. Another person on behalf of Muthuvayal village & Panchayat union asked to conduct another meeting by informing all the Panchayat properly and asked to cancel this meeting.

Another person in the meeting said that there was no information regarding the project and informed that there is no villages in the surrounding of 3 Kms. Further asked to shift the project in the non residential area and mentioned that it would be better to conduct the meeting with prior information. Further added that project is not required and to shift some where else.

Another person in the meeting said that, No public in Muthuvayal village knew about the project how many people read the paper?. It was informed that the information on project was published in paper before one month, tell, how many read it according to statistics?. 50% people had supported this project but who is that 50% people?. No one is aware in Muthuvayal, need to clarify the above.

Another person in the meeting strictly warned the Public hearing conducted by Tamil Nadu Pollution Control Board on behalf of "Naam Thamilar Katchi".

Persons in the gathering continuously shouted "cancel the meeting, cancel the meeting", and asked there was no public, then how would you conduct the meeting?.

District Revenue Officer informed that, cancel the meeting since No public came for the Biomedical waste treatment project, planned in the S.No. 249/3, Keelakottai group, Muthuvayal village.

The Participants in the meeting dispersed.

**Annexure:**

1. Copy of Attendance Register – Page No 3, 5 to 7.
2. Photograph of public hearing held on 19.09.2023.
3. Video coverage of public hearing (CD).

22/9/23 22/9/23

**District Environmental Engineer a/c),**
**Tamil Nadu Pollution Control Board,**
**Ramanathapuram District**

**District Revenue Officer**/Add District Magistrate.
**Ramanathapuram District**

3

**இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், கீழக்கோட்டை குருப், முத்துவயல் கிராமம், சர்வே எண். 249/3 – ல் பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்பு திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் 19.09.2023 அன்று முற்பகல் 10:30 மணியளவில், ஸ்ரீ ஜெயமணி சரஸ்வதி திருமண மஹால், போகலூர் கிராமம், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.**

பங்கேற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | ஆர். கோவிந்தராஜீலு | மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம். |
| 2. | ச. பாண்டியராசன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இராமநாதபுரம். |
| 3. | க. இராஜராஜேஸ்வரி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இராமநாதபுரம். |
| 4. | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டில் உள்ளபடி (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது). |

திட்டப்பிரதிநிதி

| | | |
|---|---|---|
| 5. | Dr. ஆனந்த் சொக்கலிங்கம் | இராம்நாட் டாக்டர்ஸ் அசோசியேசன், இராமநாதபுரம் |

சுற்றுச்சூழல் ஆலோசகர்

| | | |
|---|---|---|
| 6. | ஹனுமந்த்ராஜ் | தி/எ். சம்ராக்ஷன், F-4, 1 மாடி, ஸ்வஸ்திக் மனந்தி ஆர்கேட், ஷேஷத்ரிபுரம், பெங்களூர். |

பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்குவதற்கு முன்பாக கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்தவர்களில் சிலர் 11 மணி ஆகிவிட்டது, பொதுமக்கள் யாரும் வரவில்லை ஆனால் நீங்கள் கூட்டத்தை நடத்துகிறீர்கள், இங்கு அமைதி காக்க முடியாது சுற்றுச்சூழல் துறையை கண்டிப்பதாகவும், கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்யக் கோரியும் கோஷமிட்டனர். நிறுவனம் எங்கள் பஞ்சாயத்தில் வருகிறது. நிறுவனம் அமையும் இடம் முழுமையாக நீர் வடிகால் இடத்தில் வருகிறது, மீன்கள் செத்து மடிந்தன என கூறினர். ஆனால் போன தடவை அனுமதி கொடுத்திருக்கிறார்கள், மாசு கட்டுப்பாடு வாரியம் ஏமாற்றுகிறது என கூறினர்.

கூட்டத்தில் இருந்த நபர் ஒருவர் இந்த நிறுவனத்தை வைக்க கூடாது எனவும் மற்றொரு நபர் நிறுவனம் அமைந்தால் நான்கு கண்மாய் பாதிக்கும் என கூறினார். எங்கள் ஊராட்சிக்கும், ஊராட்சி மன்ற தலைவருக்கும் தகவல் தெரிவிக்கவில்லை ஆகவே கூட்டத்தை ரத்து செய்யுங்கள் என கோஷமிட்டனர்.

பொது உயிரி மருத்துவ கழிவு சத்திகரிப்பு நிறுவுவது சம்மந்தமான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்து 17.08.2023 அன்று தினத்தந்தி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்தார். இந்த திட்டத்தை பற்றிய முழு விளக்கங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் இத்திட்டத்தின் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையும் அறிக்கையின் மேலாண்மை சுருக்கமும், ஆங்கிலம் மற்றும் தமிழில்:

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், இராமநாதபுரம்.
2. மாவட்ட தொழில் மையம், இராமநாதபுரம்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், போகலூர் பஞ்சாயத்து யூனியன்.
4. ஊராட்சி மன்ற அலுவலகம், கீழாம்பல் ஊராட்சி.
5. ஊராட்சி மன்ற அலுவலகம், முத்துவயல் கிராமம்.
6. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்.
7. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கிண்டி, சென்னை.
8. மண்டல அலுவலகம், சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் அமைச்சகம், நுங்கம்பாக்கம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

கூட்டத்தில் இருந்த நபர் கீழம்பால் ஊராட்சியில் யாரிடம் இக்கூட்டத்தை பற்றிய தகவல்களை கொடுத்தீர்கள் என கேட்டார். ரகசியமாக கூட்டம் நடத்தப்படுவதாகவும், பொது மக்கள் யார் வந்திருக்கிறார்கள் எனவும் கூறுங்கள் என கேட்டார். கூட்டத்தை ரத்து செய்யுங்கள். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யப்பட்டு பொது மக்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டுள்ளது என கூறினார். கூட்டத்தில் இருந்த நபர் இணையதளத்தை பொதுமக்கள் எப்படி பார்ப்பார்கள் என கேட்டார். கூட்டத்தில் இருந்தவர்கள் கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய் என தொடர்ந்து கோஷமிட்டனர். பொது மக்கள் எங்கே ? பொது மக்கள் எங்கே ? என கோஷமிட்டனர்.

கூட்டத்தில் நபர் ஒருவர் ரகசியமாக கூட்டப்பட்ட கூட்டத்தை ரத்து செய்யவேண்டும் என முத்துவயல் கிராமம் சார்பாகவும், ஊராட்சி மன்ற தலைவர் சார்பாகவும் கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார். கூட்டத்தில் ஒருவர் முறையான அறிவிப்பு அனைத்து பஞ்சாயத்திற்கும் தெரிவித்து இக்கூட்டத்தை நிறுத்தி இன்னொரு கூட்டத்தை நடத்தும்படி அனைவரின் சார்பாகவும், முத்துவயல் கிராமத்தின் சார்பாகவும் கேட்டுக்கொள்வதாக தெரிவித்து இந்த கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என கூறினார்.

கூட்டத்தில் இருந்த மற்றொரு நபர் திட்டம் குறித்து எந்த தகவலும் இல்லை. இந்த திட்டம் ஆரம்பிக்கும் இடத்தை சுற்றி 3 கிலோமீட்டர் தொலைவில் ஊர்கள் இல்லை மக்கள் இல்லாத பகுதிக்கு மாற்ற வேண்டும் முறையாக அறிவிப்பு கொடுத்து கருத்து கேட்பு கூட்டம் நடத்தினால் நன்றாக இருக்கும் திட்டம் தேவையில்லாதது, வேறு இடத்திற்கு இத்திட்டத்தை கொண்டு செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

கூட்டத்தில் இருந்த மற்றொரு நபர் எந்த ஒரு முத்துவயல் மக்களுக்கும் இந்த திட்டம் குறித்து தெரியாது. எத்தனை மக்கள் பேப்பர் வாசிக்கிறாங்க ? ஒரு மாதத்திற்கு முன்பாக பேப்பரில் போட்டதாக சொல்லுறீங்க statistics பிரகாரம் எத்தனை பேர் பார்த்திருக்கிறார்கள். 50 சதவீத மக்கள் ஆதரவு கொடுத்ததாக சொல்லுறீங்க. யார் அந்த 50 சதவீத மக்கள் முத்துவயல் மக்கள் யாருக்குமே தெரியாது. இதற்கு சரியான விளக்கங்கள் தேவை என கேட்டார்.

கூட்டத்தில் இருந்த மற்றொரு நபர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்தும் இந்த கருத்து கேட்பு கூட்டத்தை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து கூட்டத்தில் இருந்தவர்கள் கூட்டத்தை ரத்து செய், ரத்து செய் என கோஷமிட்டனர். பொது மக்களே இல்லை கூட்டத்தை எப்படி நடத்துவீர்கள் ? என கேட்டனர்.

மாவட்ட வருவாய் அலுவலர், பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்பு சர்வே எண். 249/3, கீழக்கோட்டை குருப், முத்துவயல் கிராமம் திட்டத்திற்கு கருத்து கேட்க பொதுமக்கள் யாரும் வராததால் கூட்டத்தை ரத்து செய்வதாக அறிவித்தார்.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் கலைந்தனர்.

**இணைப்பு :**

1. வருகை பதிவேடு நகல் - பக்கம் 3, 5 முதல் 7 முடிய.
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் புகைப்படம்.
3. குறுவட்டு (CD) – காணொளி.

22/9/23

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ),**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**இராமநாதபுரம்.**

22/9/23

**மாவட்ட வருவாய் அலுவலர்/**கூடுதல் மாவட்ட நீதிபதி நடுவர்.
**இராமநாதபுரம் மாவட்டம்.**